සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2020

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2021

# வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் :......................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- ✳ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- ✳ **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ✳ இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ✳ ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- ✳ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் மொத்தப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T/EMF |
| **பிரதான பரீட்சகர்**<br>மேற்பார்வை செய்தேன். மொத்தப் புள்ளிகள் சரியாகும். | V/I/T/CH |

[பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது அந்த உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

2. ஒரு தொகுதியில் உள்ள உருக்களுக்கு மிகப் பொருத்தமான இரண்டு பொருட்கள் எவை?



(1) மணிக்கூடும் சப்பாத்தும் (2) கைப்பையும் குடையும் (3) தொப்பியும் சப்பாத்தும்


3. பின்வரும் உருக்களில் காட்டப்படும் வாகனங்களை அவற்றுக்கிடையே உள்ள சிறந்த தொடர்பின் அடிப்படையில் இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கக்கூடிய முறை யாது?



A B C D


(1) A, B உம் C, D உம் (2) A, C உம் B, D உம் (3) A, D உம் B, C உம்

4. பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ள விலங்கு வகைகளில் இரண்டிற்கு மாத்திரம் பொருத்தமான கூற்று எது?



(1) தாவர உணவுகளை உண்ணும். (2) மரங்களில் வாழும். (3) பால் குடித்து வளரும்.

5.



A B C D

அடைப்பினுள் உள்ள உருவை உருவாக்குவதற்குப் பயன்படுத்த வேண்டிய அதே விதத்தில் அமைந்த உருக்கள் இரண்டும் எவை?

(1) A உம் B உம் (2) A உம் D உம் (3) B உம் C உம்


Scanned with CamScanner

Past Papers Wiki



சுட்டெண் :..................................

6. கீழே ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய் நாணயங்கள் மூன்று வீதம் வைக்கப்பட்டுள்ள மூன்று குவியல்கள் தரப்பட்டுள்ளன.




ஒரு குவியலிலிருந்து ஒரு நாணயத்தையும் இன்னொரு குவியலிலிருந்து இரண்டு நாணயங்களையும் அடுத்த குவியலிலிருந்து மூன்று நாணயங்களையும் எடுத்து ஆக்கக்கூடிய ஆகக்குறைந்த தொகை எவ்வளவு?

(1) ரூபாய் 8 (2) ரூபாய் 12 (3) ரூபாய் 20

7. கீழே மூன்று முக்கோணிகள் தரப்பட்டுள்ளன.




இந்த முக்கோணிகள் மூன்றையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட உரு எது?



(1) (2) (3)


8. உருவில் ஒரே தராசினால் ஒரு அன்னாசிப்பழம், ஒரு மாம்பழம், ஒரு பப்பாளிப்பழம் என்பவற்றின் நிறையை அளக்கின்ற மூன்று சந்தர்ப்பங்கள் தரப்பட்டுள்ளன.



இந்தப் பழங்களின் நிறை பற்றிய சரியான கூற்று எது?

(1) அன்னாசிப்பழத்தின் நிறை மாம்பழத்தின் நிறையின் இரு மடங்காகும்.
(2) பப்பாளிப்பழத்தின் நிறை மாம்பழத்தின் நிறையின் மூன்று மடங்காகும்.
(3) அன்னாசிப்பழத்தின் நிறை பப்பாளிப்பழத்தின் நிறையின் இரு மடங்காகும்.

9. உருவில் பல்வேறு நீர் மட்டங்கள் உள்ள சமமான பாத்திரங்கள் ஐந்து காட்டப்பட்டுள்ளன.



நீர் மட்டம் அதிகரிக்கும் ஒழுங்குமுறைப்படி அந்தப் பாத்திரங்களை வரிசைப்படுத்துவதற்கு ஆகக் குறைந்தது எத்தனை பாத்திரங்கள் இருக்குமிடம் மாற்றப்பட வேண்டும்?

(1) ஒன்றினது (2) இரண்டினது (3) மூன்றினது

10. வாசனை எதுவும் எனக்கு இல்லை
எனது வடிவம் என் இருப்பிடமே
புவியில் அனைத்தின் ஆதாரம் நான்
கோபம் கொண்டால் கொடுப்பதில்லை மன்னிப்பு

இந்தப் பாடலின் கருத்து மிகச் சரியாகப் பொருந்துவது

(1) காற்றுக்கு (2) வெளிச்சத்துக்கு (3) நீருக்கு

[பக். 4 ஐப் பார்க்க

Scanned with CamScanner

11. பின்வரும் உரைப்பகுதியின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொற்கள் அடங்கிய பகுதி எது?

தேனீ மிகவும் சுறுசுறுப்பும் உற்சாகமும் மிக்க பிராணி ஆகும். தொலை தூரத்தில் உள்ள ______ சென்று தேனை உறிஞ்சிக் கொண்டு வந்து தேன்கூட்டில் சேகரிக்கும் தேன்கூடு தேனீயின் அற்புதமான ______ தேன் கூட்டைக் கட்டுவதற்குத் தேனீ விசேட திறனைக் காட்டுகின்றது. தேனீயின் இந்த ______ சுறுசுறுப்பு உற்சாகம் என்பவற்றைச் சிறுவர்களாகிய நாம் முன்மாதிரியாகக் கொள்வோம்.

(1) பூக்களுக்கு / ஆக்கமாகும். / திறமை

(2) மரங்களுக்கு / இடமாகும். / திறமை

(3) பூக்களுக்கு / அலங்காரமாகும் / முயற்சி

12. "காடழிப்பு முக்கியமாக நீரூற்றுக்கள் வற்றிப் போவதற்கும் சுத்தமான காற்றைப் பெறமுடியாது போவதற்கும் மண்ணரிப்புக்கும் காரணமாகின்றது. அதன் அழிவு என்பது எங்களின் அழிவினை நாமே நெருக்கமாகக் கொண்டு வருவதாகும்."

மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களினால் உணர்த்தப்படுவது

(1) காட்டு வளத்தின் முக்கியத்துவம் பற்றியதாகும்.


(2) காட்டு வளம் அழிவடைந்துள்ளது என்பதாகும்.

(3) காடுகள் நீரூற்றுக்கள் உண்டாவதில் தாக்கம் செலுத்துகின்றது என்பதாகும்.


13. கடிகாரத்தின் முகம் மூன்று துண்டுகளாக உடைந்து விட்டது. இவற்றில் ஒரு துண்டில் 8, 9, 10, 11, 12 என்பவற்றைக் காணக்கூடியதாக இருந்தது. இன்னொரு துண்டில் இருந்த இலக்கங்களின் கூட்டுத்தொகை 12 ஆகும். மீதித் துண்டில் இருந்த இலக்கங்களின் கூட்டுத்தொகை எவ்வளவு?

(1) 12 (2) 14 (3) 16


14. பாடசாலையிலிருந்து நாற்சந்தியை நோக்கி வரும் ஒருவர் தனக்கு முன்னே இருந்த அறிவிப்புப் பலகையைக் காண முடியும்.





வைத்தியசாலையிலிருந்து அந்த நாற்சந்தியை நோக்கி வரும் ஒருவருக்குத் தெரியும் அறிவிப்புப் பலகை எது?




(1)





(2)




(3)

15. கோலத்துக்கு ஏற்ப ? குறியீட்டுக்குப் பொருந்தும் எண் யாது?




(1) 16 (2) 19 (3) 29



Scanned with CamScanner

Past Papers Wiki




16. ஓட்டப்போட்டி முடிவடையும் தருணத்துக்கு முன்னர் அருண் இரண்டாம் இடத்திலிருந்த நிலனை முந்திச் சென்றான். பின்னர் போட்டியாளர்களின் இடங்களில் மாற்றம் இடம்பெறவில்லை.
பின்வரும் கூற்றுக்களை அவதானிக்குக.

A - அருண் முதலாமிடத்தவர்
B - அருண் இரண்டாமிடத்தவர்
C - நிலன் இரண்டாமிடத்தவர்
D - நிலன் மூன்றாமிடத்தவர்

இவற்றில் எந்த இரண்டு கூற்றுக்கள் உண்மையானவை?

(1) A உம் C உம் (2) A உம் D உம் (3) B உம் D உம்

17. பின்வருவனவற்றுள் எந்த மூன்று வடிவங்களை இணைப்பதனால் சதுரம் ஒன்றைப் பெற முடியும்?




(1) A, B, C (2) A, C, D (3) A, D, E

18. சதிஷ் ஆண் பிள்ளையாவார். அவருக்கு இருந்த சகோதரன்மாரின் எண்ணிக்கையும் சகோதரிமாரின் எண்ணிக்கையும் சமன் ஆகும். சதிஷின் தங்கையான சீதாவுக்கு இருந்த சகோதரன்மாரின் எண்ணிக்கை அவருக்கு இருந்த சகோதரிமாரின் எண்ணிக்கையிலும்

(1) மிகக் கூடுதலாகும். (2) மிகக் குறைவாகும். (3) சமமானதாகும்.

19. ஆகாஷ், நித்தி, சுரேஷ் ஆகிய மூவரில் இருவர் நித்தியை விட மூத்தவர்கள். இருவர் சுரேஷை விட இளையவர்கள். இதற்கேற்ப வயது அதிகரிக்கும் ஒழுங்குமுறைக்கமைய அவர்கள் மூவரும்

(1) ஆகாஷ், நித்தி, சுரேஷ் (2) நித்தி, ஆகாஷ், சுரேஷ் (3) நித்தி, சுரேஷ், ஆகாஷ்

20. ஒரு வகுப்பறையிலிருந்த பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை அங்கு இருந்த ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையின் இரு மடங்காகும். அந்த வகுப்பறையிலிருந்த பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையையும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையையும் கூட்டினால் வருவது


(1) 25 ஆகும். (2) 26 ஆகும். (3) 27 ஆகும்.

21. கோலத்திற்கேற்ப வெற்று அடைப்புக்குப் பொருத்தமான எண் யாது?

240 → 48 → 12 → 4 → 2 → ......

(1) 0 (2) 1 (3) 2

22. காலையில் விளையாட்டு மைதானத்திற்குச் சென்ற பசீதன் A இலிருந்து B ஐ நோக்கி ஓடியபோது அவனது நிழல் அவனுக்குப் பின்னால் விழுந்திருந்தது.
பசீதன் B இலிருந்து C ஐ நோக்கி ஓடும்போது அவனது நிழல் விழுந்திருந்தது




(1) வலது பக்கத்தில்
(2) இடது பக்கத்தில்
(3) முன்னால்

Scanned with CamScanner

23. உருவில் காட்டப்பட்டுள்ள கலையமைப்பில் முதலாவது நிரையையும் மூன்றாவது நிரையையும் ஒன்றோடொன்று மாற்றும்போது பெறுகின்ற கலையமைப்பின் முதலாவது நிரலும் மூன்றாவது நிரலும் ஒன்றோடொன்று மாற்றப் பெறும். அவ்வாறு செய்யும்போது ஒரு தடவை மாத்திரம் இடம் மாறுகின்ற எழுத்துக்கள் எத்தனை உள்ளன?


| | | |
|---|---|---|
| a | b | c |
| f | e | d |
| g | h | i |

(1) 2 (2) 4 (3) 6

24. சரியாக நடுப்பக்கத்தில் இணைக்கும் கம்பியைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட 40 பக்கங்களைக் கொண்ட அப்பியாசப் புத்தகத்தில் 13 ஆம் 14 ஆம் பக்கங்களுக்கு உரிய தாள்கள் முழுமையாகக் கிழித்து அகற்றப்படும்போது அதனுடன் புத்தகத்திலிருந்து கழன்று விழக்கூடிய வேறு தாள்களுக்குரிய இரண்டு பக்கங்களும் எவை?


(1) 23 உம் 24 உம் (2) 27 உம் 28 உம் (3) 33 உம் 34 உம்

25. நிகழ்வு ஒன்றின் ஐந்து சந்தர்ப்பங்கள் உருச் சட்டகத்திலுள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கு முறையாக வரக்கூடியது எது?





(1) A, C, D, B, E (2) A, C, E, B, D (3) D, A, B, E, C

26. அடைப்புக்குள் உள்ள உரு நிரையில் அடுத்து இடம்பெற வேண்டிய உரு எது?




27. கீழே தரப்பட்டுள்ள A, B, C என்ற மூன்று உருக்களையும் பாருங்கள்.




மூன்று உருக்களிலும் இருக்கும் ஏதோவொரு பொதுப்பண்புக்கு ஏற்ப இவற்றில் இரண்டு உருக்களைச் சோடியாக்க முடியும். அந்தச் சோடி


(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம்

[பக். 7 ஐப் பார்க்க

**28.** ஆத்திசூடி, நல்வழி, அம்புலிமாமா, சிறுவர்மலர், கல்கண்டு என்ற ஐந்து புத்தகங்களில் கவின் இரண்டு புத்தகங்களை வாசிக்கவில்லை. இராணி மட்டும் ஆத்திசூடி புத்தகத்தை வாசித்துள்ளார். இராணியைப் போல கவினும் நல்வழி, அம்புலிமாமா என்ற புத்தகங்களை வாசித்துள்ளார். இதற்கேற்ப கவின் நிச்சயமாக

(1) ஆத்திசூடி, சிறுவர்மலர் என்ற இரண்டு புத்தகங்களையும் வாசிக்கவில்லை.
(2) ஆத்திசூடி, கல்கண்டு என்ற இரண்டு புத்தகங்களையும் வாசிக்கவில்லை.
(3) சிறுவர்மலர், கல்கண்டு என்ற இரண்டு புத்தகங்களில் ஒன்றை வாசிக்கவில்லை.

**29.**




உருவில் கோல் P இல் இடப்பட்டுள்ள மூன்று சில்லுகளையும் கோல் Q ஐப் பயன்படுத்தி கோல் R இற்கு அதே ஒழுங்குமுறையில் இருக்கும் விதத்தில் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய மாற்ற வேண்டும்.

- ஒரு தடவையில் ஒரு சில்லு மட்டுமே அகற்றப்பட முடியும்.
- எப்போதும் மேலே உள்ள சில்லே அகற்றப்பட முடியும்.
- அகற்றப்பட்ட சில்லை கையில் வைத்திருக்காது கோலில் இடுதல் வேண்டும்.
- கோலில் சிறிய சில்லிற்கு மேலே பெரிய சில்லை இட முடியாது.


இதற்கேற்ப மூன்று சில்லுகளையும் கோல் R இற்கு மாற்றுவதற்குச் செய்ய வேண்டிய **மிகக் குறைந்தளவு மாற்றுதல்களின்** எண்ணிக்கை எத்தனை?


(1) 3 (2) 7 (3) 11


**30.** 15 சிறுவர்கள் நின்றுகொண்டிருக்கும் நிரையில் இருந்த அருணி அவர் நிற்கும் இடத்தின் அவரின் இடப்பக்கமாக 4 இடங்களுக்கு இடம் மாறினார். அவர் இப்போது நிற்பது நிரையின் இடதுகைப் பக்க ஆரம்பத்திலிருந்து 6 ஆவது இடத்திலாகும். அவர் முதலில் நின்ற இடத்தில் அவரின் வலது பக்கத்தில் எத்தனை சிறுவர்கள் நின்றிருந்தனர்?


(1) நான்கு சிறுவர்கள் (2) ஐந்து சிறுவர்கள் (3) ஆறு சிறுவர்கள்

**31.** கோலத்துக்கு ஏற்ப ? குறியீட்டிற்குப் பொருத்தமான உரு எது?




(1) 

(2) 

(3) 

**32.** காண்டாமணி டாங்... டாங்... டாங்... டாங்... என ஒரே விதத்தில் தொடர்ந்து ஒலி எழுப்பியது. மணியின் ஒலி ஒரு முறையில் மூன்று தடவை எழும் ஓசையைக் கேட்பதற்கு எடுக்கும் ஆகக்குறைந்த நேரம் 6 செக்கன்களாகும். அவ்வாறு அது ஒரு முறையில் ஏழு தடவை எழும் ஓசையைக் கேட்பதற்கு எடுக்கும் ஆகக்குறைந்த நேரம் எவ்வளவு?

(1) 14 செக்கன்கள் (2) 18 செக்கன்கள் (3) 21 செக்கன்கள்

**33.** மாமரத்தில் நான்கு குருவிகளும் கொய்யா மரத்தில் இரண்டு குருவிகளும் இருந்தன. மாமரத்தில் இருந்த இரண்டு குருவிகள் கொய்யா மரத்திற்குப் பறந்து சென்றபோது கொய்யா மரத்தில் இருந்த ஒரு குருவி மாமரத்திற்கு வந்தது. இப்போது மாமரத்தில் இருக்கும் குருவிகளின் எண்ணிக்கை கொய்யா மரத்தில் இருந்த குருவிகளின் எண்ணிக்கைக்கு

(1) சமமாகும். (2) குறைவாகும். (3) கூடுதலாகும்.

[பக். 8 ஐப் பார்க்க

Scanned with CamScanner

34. போட்டியில் வெற்றிபெற்ற குழுவில் இருந்த அங்கத்தவர் எண்ணிக்கை 5 ஆகும். அவர்கள் எல்லோருக்கும் நடுவர் கைலாகு கொடுத்தார். அவர்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் கைலாகு கொடுத்து மகிழ்ந்தனர். இங்கு இடம்பெற்ற கைலாகு கொடுத்தல் நிகழ்ந்த தடவைகளின் எண்ணிக்கை எத்தனை?

(1) 9 (2) 10 (3) 15


35. வியாபாரி ஒருவர் மூன்று பென்சில்களை ஐம்பது ரூபாவிற்கு வாங்கி இரண்டு பென்சில்களை ஐம்பது ரூபாவிற்கு விற்றார். அவர் நாள் ஒன்றில் பென்சில்களை விற்றதனால் 500 ரூபா இலாபம் பெற்றிருந்தால் அன்று அவன் விற்ற பென்சில்களின் எண்ணிக்கை யாது?

(1) 25 (2) 50 (3) 60

36. 2022 வருடத்துக்கான ஒரு நாட்காட்டி ஒவ்வொரு மாதத்துக்கும் ஒரு பக்கம் உள்ள விதத்தில் தயாரிக்கப்பட்டது. ஒவ்வொரு பக்கத்திலும் அதற்குரிய மாதத்தை விட முன்னிருந்த மாதமும் பின்வரும் மாதமும் சிறிய அளவில் அச்சிடப்பட்டு இருந்தன. இந்த நாட்காட்டியின் 12 பக்கங்களில் 2022 வருடத்துக்கு உரிய மாதங்கள் மாத்திரம் எத்தனை பக்கங்களில் அச்சிடப்பட்டு இருந்தன?

(1) 10 (2) 11 (3) 12

37. உருவில் காணத்தக்க செவ்வகங்களின் எண்ணிக்கை




(1) நான்கு ஆகும்.

(2) ஏழு ஆகும்.

(3) ஒன்பது ஆகும்.

38. சிறிய அளவிலான மரக்குற்றித் தொகுதிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கட்டமைப்பு ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. பெரிய அளவிலான சதுர மரத்துண்டினைப் பூரணப்படுத்துவதற்கு சிறிய அளவிலான மரக்குற்றிகள் இன்னும் எத்தனை தேவை?



(1) 9

(2) 14

(3) 30

39. சிவப்பு, நீலம், பச்சை நிறங்கள் உள்ள மூன்று பென்சில்களின் நீளம் பற்றிய இரண்டு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- சிவப்பு நிறப் பென்சிலின் நீளத்தினதும் நீல நிறப் பென்சிலின் நீளத்தினதும் கூட்டுத்தொகையை விடப் பச்சை நிறப் பென்சிலின் நீளம் அதிகமாகும்.
- பச்சை நிறப் பென்சிலின் நீளத்தினதும் நீல நிறப் பென்சிலின் நீளத்தினதும் கூட்டுத்தொகையை விடப் பச்சை நிறப் பென்சிலின் நீளத்தினதும் சிவப்பு நிறப் பென்சிலின் நீளத்தினதும் கூட்டுத்தொகை அதிகமானதாகும்.

இதற்கேற்ப நீளம் குறைவான பென்சிலிலிருந்து நீளம் கூடுதலான பென்சில் வரை பென்சில்களின் நிறங்களின் ஒழுங்குமுறை யாது?

(1) நீலம், சிவப்பு, பச்சை (2) சிவப்பு, நீலம், பச்சை (3) நீலம், பச்சை, சிவப்பு

40. ஒரு பாதையில் பயணிக்கும் போது ரமணியின் வீட்டுக்குப் பின்னால் பத்மா, மீனா, நளினி ஆகிய நண்பர்களின் வீடுகளைக் காணலாம். அவர்கள் ஒவ்வொருவருடைய வீடுகளுக்கும் இடையிலான தூரம் கிலோமீற்றரில் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| | மீனா | பத்மா | நளினி |
|---|---|---|---|
| பத்மா | | | 3 |
| மீனா | | 4 | 1 |
| ரமணி | 2 | ...... | 3 |

ரமணியினதும் பத்மாவினதும் வீடுகளுக்கு இடையிலான தூரம் எத்தனை கிலோமீற்றர்?

(1) 3 (2) 5 (3) 6

***

Scanned with CamScanner

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka
All Rights Reserved]

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2020

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2021

# வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் :................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழே கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதி மொத்தப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T/EMF |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/II/T/CH |

[பக். 2 ஐப் பார்க்க

**1.** பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

ஒரு நாள், எங்கள் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரின் பங்குபற்றுதலுடன் சிரமதானம் நடைபெற்றது. சிரமதானம் செய்வதற்கான அடிப்படை நோக்கம் பாடசாலைத் தோட்டத்தைச் சுத்தம் செய்வதாகும். பூப்பாத்திகளை அமைத்தல், பாடசாலை வளவினுள் உள்ள பொருள்களை உக்குகின்றவை, உக்காதவை எனத் தெரிந்து வேறுபடுத்தல், குப்பை கூழங்களை அகற்றுதல் ஆகிய செயற்பாடுகள் அங்கு இடம்பெற்றன. இதன் பொருட்டு பெரியவர்கள், சிறியவர்கள் அனைவருமே மிகுந்த விருப்பத்துடன் பங்குபற்றினர். பங்குபற்றிய அனைவருக்கும் அதிபர் அவர்கள் நன்றி கூறியதுடன் நிகழ்ச்சித்திட்டம் நிறைவடைந்தது. எனது பாடசாலை இப்போது எவ்வளவு அழகாயிருக்கின்றது என்று எனக்குத் தோன்றியது.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) சிரமதானத்தில் பங்குபற்றியவர்கள் யாவர்?

.......................................................................................................

(ii) சிரமதானம் செய்வதற்கான அடிப்படை நோக்கம் யாது?

.......................................................................................................

(iii) சிரமதானத்தின் போது நடைபெற்ற செயற்பாடு ஒன்றை எழுதுக.

.......................................................................................................

(iv) 'நீக்குதல்' என்பதன் ஒத்தகருத்தைக் குறிப்பிடுவதாகப் பந்தியில் பயன்படுத்தப்பட்டுள்ளது எது?

.......................................................................................................

(v) பந்தியில் இடம்பெற்றுள்ள அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக. ..............................

(vi) பாடசாலை பற்றி மாணவனுக்குத் தோன்றியது யாது? ..............................

**2.** பின்வரும் வாக்கியத்தின் சொற்களில் உள்ள பிழையான எழுத்துக்களைத் திருத்தி மீண்டும் எழுதுக.

தொலைக்காற்சி நிகள்ச்சிகளை நீண்ட நேரம் பார்ப்பது கண்களுக்கு பாதிப்பை ஏர்படுத்தும்.

.......................................................................................................

.......................................................................................................

**3.** பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி நிகழ்கால வினைச்சொல் சேர்த்து மீண்டும் எழுதுக.

(i) கிளி மாமரத்திலை இருந்தது.

.......................................................................................................

(ii) நான் பூந்தோட்டத்திலை சென்று பூப்பறித்தேன்.

.......................................................................................................

**4.** கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.

(i) தேடி / ஒழுங்குபடுத்தினேன் / தேவையான / விடயங்களைத் / அடிப்படை / கட்டுரைக்குத்

....................................................................................................... .

(ii) அறிகுறிகளை / டெங்கு / அவதானமாக / நோயின் / அறிந்து / இருத்தல் / அவசியமாகும்

....................................................................................................... .

**5.** பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

| |
|---|
| ஆசிரியர் எங்கள் இலங்கை என்ற பாடலைப் பாடினார் |

[பக். 3 ஐப் பார்க்க

 சுட்டெண் : ......................................

6. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரும் வெளிப்படுத்தும் கருத்தை கட்டத்திற்குள் இருந்து தெரிவு செய்து கீறிட்ட இடங்களில் எழுதுக.

(i) முன்னுக்கு வருதல் : ..............................................................

(ii) தட்டிக் கழித்தல் : ..............................................................

| |
|---|
| உற்சாகப்படுத்துதல் / சாக்குப் போக்குச் சொல்லுதல் / சொன்ன சொல் தவறுதல் / உயர்ச்சியடைதல் |

7. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு **சரியாயின்** '✓' எனவும் **பிழையாயின்** '×' எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) புறா பறந்து சென்றன. (.........)

(ii) ஆசிரியர் அழகான கதை ஒன்றைக் கூறினார். (.........)

(iii) மாலாவும் கீதாவும் தினமும் பத்திரிகை வாசிப்பார்கள். (.........)

8. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

உனக்கு உதவி செய்தவரை என்றும் மறவாதே.

..............................................................................................

9. பின்வரும் இணைமொழிகளில் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

| |
|---|
| ஆற அமர, அல்லும் பகலும், மூலை முடுக்கு, பேரும் புகழும், நீட்டி நிமிர்ந்து |

(i) விவசாயிகள் .......................................... பாடுபட்டு உழைத்தனர்.

(ii) அறிஞரின் புகழ் .......................................... எங்கும் பரவியது.

10. பின்வரும் வாக்கியத்தை ஆண்பால், ஒருமை, இறந்த கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

சிறுமி காலையில் பாடசாலைக்குச் சென்றாள்.


..............................................................................................

11. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

(i) Vegetables : .......................................... (ii) Library : ..........................................


12. ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைக் கட்டத்தினுள் **ஆங்கில** எழுத்துகளில் எழுதுக.

(i)



| F | | | | t | |
|---|---|---|---|---|---|

(ii)



| B | | | | | | | f | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) our / This / bus / is / school : ..........................................

(ii) works / the / field / Father / in / paddy : ..........................................

[பக். 4 ஐப் பார்க்க

14. 'பொல' என்ற சிங்களச் சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக. : ..............................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.

பால் குடியுங்கள் : ..............................................................................................

16. 'ஆறாயிரத்து முப்பத்தேழு' இந்த எண்ணை இலக்கத்தில் எழுதுக. : ..............................

17. பின்வரும் எண்ணை இடப்பெறுமானத்திற்கு அமைய விரித்து எழுதுக.

8415 = .................. + .................. + .................. + ..................

18. எண்கோலத்துக்கேற்ப வெற்றிடங்களில் இடம்பெற வேண்டிய எண்களை எழுதுக.

...... , ...... , 11 , 14 , 17 , 20

19. 

| | |
|---|---|
| 7 | 5 |
| 4 | |

கட்டத்திலுள் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணுக்கும் மிகச் சிறிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

: ..............................

20. பழப்பானத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பழப்பானப் போத்தல்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | மாம்பழப் பானம் | தோடம்பழப் பானம் |
|---|---|---|
| ஜனவரி | 1537 | 1325 |
| பெப்ரவரி | 1065 | 980 |

(i) ஜனவரி மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்தப் பழப்பானப் போத்தல்களின் எண்ணிக்கை யாது?

: ..............................

(ii) ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மாம்பழப்பானப் போத்தல்களின் எண்ணிக்கைகளுக்கு இடையிலான வேறுபாடு யாது?


: ..............................

21. 107 ஐ 5 இனால் பெருக்கும்போது வரும் விடை யாது? : ..............................

22. ஒரு பாத்திரம் கொள்ளத்தக்க ஆகக் கூடிய நீரின் அளவு 2 லீற்றர் ஆகும். அதில் 750 மில்லிலீற்றர் நீர் உள்ளது. அந்தப் பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவைப்படும்?

: ......... l .................... ml

23. 424 புத்தகங்கள் 4 பெட்டிகளில் சமமாக வைக்கப்பட்டுள்ளன. ஒரு பெட்டியில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை யாது? : ..............................

24. 

உருவில் உள்ள மாம்பழங்களின் குவியலில் நான்கில் மூன்று பங்கு ($\frac{3}{4}$) மாம்பழங்கள் எத்தனை? : ..............................

25. 125 ரூபாய்க்கு ஓர் அன்னாசிப்பழத்தையும் 80 ரூபாய்க்கு இரண்டு தர்ப்பூசணிப் பழங்களையும் வாங்கிய பின்னர் 500 ரூபாய்த் தாளினைக் கொடுக்கும்போது கிடைக்கும் மீதி யாது?

: ரூபாய் ..............................

26. 5 மீற்றர் நீளமுள்ள **துணியில்** உடை ஒன்றைத் தைப்பதற்கு 2 மீற்றர் 25 சென்ரிமீற்றர் அளவை வெட்டி நீக்கினால் மீதியாக உள்ள **துணியின்** அளவு எவ்வளவு? : ............ m ............ cm

[பக். 5 ஐப் பார்க்க


**27.** தராசு ஒன்றில் ஒரு தட்டில் அன்னாசிப்பழம் ஒன்றும் 50 g படி ஒன்றும் வைக்கப்பட்டு அந்த நிறையைச் சமமாக்குவதற்கு மற்றைய தட்டில் 1 kg படி ஒன்றும் 500 g படி ஒன்றும் வைக்கப்பட்டன. அன்னாசிப்பழத்தின் நிறை எவ்வளவு? : ............ kg ............ g

**28.** கடிகார முகத்தில் காட்டப்படும் நேரத்தை இலக்கங்களில் எழுதுக.




பிற்பகல் ...............................

**29.** மாணவர் குழுவொன்றுக்கு மிகவும் விருப்பமான பழங்களின் வகைகள் பற்றிய தகவல்கள் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளன.




(i) சமமான எண்ணிக்கையிலான மாணவர்கள் விரும்பும் பழ வகை யாது?

:..................................................

(ii) பப்பாளிப் பழங்களை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க மாம்பழங்களை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு கூடுதலானது?

:..................................................

- **30** தொடக்கம் **59** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** பின்வருவனவற்றுள் இலைக் கஞ்சியைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுவது எது?
(1) வில்வம் பூ (2) சாத்தாவாரி (3) அகத்தி

**31.** ஒரு விதையை மாத்திரம் கொண்ட பழம் எது?
(1) கொய்யா (2) ரம்புட்டான் (3) பப்பாளி

**32.** நாளாந்தம் பயன்படுத்தத் தேவையான உலோக உபகரணங்களைத் தயாரிக்கும் கைத்தொழில் எது?
(1) மரவேலை (2) மேசன் வேலை (3) கொல்லன் வேலை

**33.** சூடான பானத்தைப் பரிமாறுவதற்கு மிகவும் பொருத்தமான பாத்திரம் எது?
(1) கைப்பிடி இல்லாத பிளாத்திக்குக் கோப்பை
(2) கைப்பிடி கொண்ட பீரிஸ் கோப்பை
(3) ஊடுகாட்டும் கண்ணாடிக் குவளை

**34.** தேசியக் கொடியில் சிவப்பு நிறப் பின்னணியில் குறியீடாகக் காட்டப்படுவது
(1) பல்வேறு இனங்களின் பிரதிநிதித்துவம்
(2) இனங்களுக்கிடையிலான ஒற்றுமை
(3) தேசத்தின் மகத்துவம்

**35.** சித்திரம் ஒன்றுக்கு வர்ணம் தீட்டுவதற்குத் தேவையான ஊதா நிறத்தை ஆக்குவதற்குச் சமமான அளவில் கலக்கக்கூடிய இரண்டு நிறங்களும் எவை?
(1) நீலமும் மஞ்சளும் (2) நீலமும் சிவப்பும் (3) மஞ்சளும் சிவப்பும்

**36.** கால்கள் இல்லாத பிராணி
(1) மட்டைத்தேள் (2) மண்புழு (3) கரப்பான் பூச்சி


**37.** கமலாவின் மதிய நேர உணவுக்காக வைக்கப்பட்டிருந்த சோறு, உருளைக்கிழங்கு, வெண்டிக்காய், பொன்னாங்கண்ணி வறை என்பன இரண்டு உணவுத் தொகுதிகளுக்கு உரியனவாகும். இவற்றுக்கு மேலதிகமாக இந்த உணவு வேளைக்கு உள்ளடக்க வேண்டிய மற்றைய உணவுத் தொகுதி எது?
(1) சக்திக்கானது (2) பாதுகாப்புக்கானது (3) வளர்ச்சிக்கானது

[பக். 6 ஐப் பார்க்க

**38.** 'ஆனகட்டி ஏலேலப்படி சேர்குழப்பி
அயிறு சம்பா ஏலேலப்படி நாத்து நட்டு
ஆளுகளே ஏலேலப்படி கூப்பிடுங்கோ'
இது

(1) மீனவர் பாடல் (2) சேனைப்பாடல் (3) தாலாட்டுப்பாடல்

**39.**




மேலே தரப்பட்டுள்ள மூன்று பாத்திரங்களில் ஆரோக்கியமான பயற்றங்காய் விதைகள் சமமான அளவில் இடப்பட்டுள்ளன. விதைகள் முளைப்பதற்கு எந்தக் காரணி தேவையானது என்பதைக் கண்டறிவதற்கு இந்தப் பரிசோதனை பயன்படுத்தப்படுகின்றது?

(1) வெளிச்சம் (2) வாயு (3) ஈரப்பதன்

**40.** நாளாந்தம் நேரசூசியின்படி வேலை செய்வதன் காரணமாக
(1) குறித்த நேரத்தில் வேலையை நிறைவேற்றும் பழக்கம் ஏற்படும்.
(2) நாளாந்தம் செய்ய வேண்டிய பணிகள் தாமதமாகும்.
(3) விளையாடுவதற்கு நேரம் இல்லாது போகும்.

**41.**

| **உணவு வகை** | **உற்பத்தித் தினம்** | **காலாவதியாகும் தினம்** |
|---|---|---|
| ரின் மீன் | 2021.05.06 | 2024.05.06 |
| தயிர் | 2021.06.23 | 2022.06.30 |
| ரின்பால் | 2021.02.21 | 2022.08.20 |

மாணவர் ஒருவர் புத்தகத்தில் எழுதியிருந்த அட்டவணை மேலே காட்டப்பட்டுள்ளது. காலாவதியாகும் தினம் தவறாக எழுதப்பட்டுள்ள உணவு எது?

(1) ரின் மீன் (2) தயிர் (3) ரின்பால்


**42.** கால வேறுபாடுகளின்றிப் பூப்பூக்கின்ற தாவரத்தையும் வருடத்தின் குறித்த ஒரு காலத்தில் மாத்திரம் பூப்பூக்கின்ற தாவரத்தையும் ஒழுங்கு முறைப்படி குறிப்பிடும் விடை எது?

(1) தென்னை, வாழை (2) ரம்புட்டான், முள்முருக்கு (3) வாழை, முள்முருக்கு

**43.** பின்வருவனவற்றுள் எதில் செப்புக் கம்பியைச் சுற்றுவதன் மூலம் மின் காந்தத்தைச் செய்யலாம்?

(1) இரும்பு ஆணி (2) மரத்துண்டு (3) பிளாத்திக்குக் குழாய்

**44.** உலர் கலத்துடன் இரண்டு மின்சூள் மின்குமிழ்கள் கம்பித்துண்டுகளினால் இணைக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒரு மின்குமிழ் மாத்திரம்** ஒளிரும் சந்தர்ப்பம் எது?



(1) (2) (3)

**45.** வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தை அவதானிப்பதற்கு வண்ணத்துப்பூச்சியின் முட்டைகள் உள்ள சிறிய அகத்திமரக் கிளையின் துண்டு ஒன்று கண்ணாடிப் போத்தலில் வைக்கப்பட்டுள்ளது. அப்போத்தலின் வாய் காகிதத் துண்டினால் மூடப்பட்டு நூலினால் கட்டப்பட்டு குண்டூசி ஒன்றினால் கடதாசியில் துளைகள் இடப்பட்டுள்ளன. அவ்வாறு துளைகள் இடுவது

(1) நீர் செல்வதற்கு (2) வளி செல்வதற்கு (3) வெளிச்சம் செல்வதற்கு

[பக். 7 ஐப் பார்க்க

සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



46. நன்றாக வெளிச்சம் உள்ள சந்தர்ப்பத்தில் ஊசித்துளைக் கமராவைப் பயன்படுத்தி ஒரு மரத்தைப் பார்க்கும்போது அந்த மரம் தெரிவது
(1) மேல்நோக்கி (2) தலைகீழாக (3) இருக்கும் அளவில்

47. ஒற்றுமையாகச் செயற்படுவதால் வெற்றி பெற முடியும் என்பதை எடுத்துக்காட்டுவது
(1) காகமும் வடையும் கதை
(2) தொப்பி வியாபாரியின் கதை
(3) வேடனும் புறாவும் கதை

48. நாய் கடித்து விட்டால் முதலில் செய்ய வேண்டியது என்ன?
(1) கடித்த இடத்தைச் சவர்க்காரம் இட்டு ஓடிக்கொண்டிருக்கும் சுத்தமான நீரினால் நன்றாகக் கழுவுதல்
(2) கடித்த இடத்துக்கு மேலே துணிக் கீலங்களினால் இறுக்கமாகக் கட்டிவிடுதல்
(3) கடித்த இடத்தில் கைமருந்து ஒன்றைப் போட்டு நன்கு கட்டிவிடுதல்

49. கடை ஒன்றில் விற்பனைக்காக இருந்த பான வகையொன்றின் லேபலில் சிவப்பு நிற வட்டம் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனால் கருதப்படுவது
(1) சீனி முழுமையாக அகற்றப்பட்டுள்ளது என்பதாகும்.
(2) சீனி குறைந்த அளவில் உள்ளது என்பதாகும்.
(3) சீனி அதிக அளவில் உள்ளது என்பதாகும்.

50. சமமான பாரத்தை இழுத்துச் செல்வதைக் குறிக்கும் மூன்று சந்தர்ப்பங்களில் பாரத்தை இழுத்துச் செல்வதற்கு மிகவும் **சிரமமான** சந்தர்ப்பம் எது?





(1) (2) (3)

51. பொருட்கள் பற்றிய விளம்பரங்களின் முக்கிய நோக்கமாக அமைவது
(1) அந்தப் பொருளை வாங்குவதற்கு மக்களை அதிக அளவில் ஈடுபடுத்துதல்
(2) அந்தப் பொருள்களின் நன்மை தீமை பற்றி மனிதர்களுக்கு அறிவூட்டுதல்
(3) அந்தப் பொருள்களின் உற்பத்தியில் மற்றவர்களையும் ஊக்கப்படுத்துதல்

52. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடும்போது **செய்யத்தகாத** செயற்பாடு
(1) நினைவில் வைத்திருப்பதற்கு ஏவையேனும் பகுதிகளை எடுத்துச் செல்லுதல்
(2) அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்
(3) அதன் முக்கியத்துவம் பற்றிய தகவல்களை விசாரித்து அறிந்து கொள்ளல்

53.




A, B, C என்பன மூன்று ஒத்த கண்ணாடிக் குவளைகளாகும். ஒரே இடத்தில் வைக்கப்பட்டுள்ள இக் கண்ணாடிக் குவளைகள் மூன்றிலும் ஒரே சந்தர்ப்பத்தில் ஒரே அளவிலான பனிக்கட்டிகள் சமமான எண்ணிக்கையில் இடப்பட்டுள்ளன. பனிக்கட்டி விரைவில் உருகிவிடும் கண்ணாடிக் குவளையிலிருந்து மெதுவாக உருகும் கண்ணாடிக் குவளை வரைக்கும் அக்குவளைகள் ஒழுங்குமுறையில் குறிப்பிடப்படும் விடை யாது?
(1) A, B, C (2) B, C, A (3) C, A, B


54. 'புலத் ஹய்யா' இலங்கைக்கே உரித்தான மீனாகக் கருதப்படுவது
(1) வேறு நாட்டிலிருந்து கொண்டு வந்து இலங்கையில் விருத்தியடையச் செய்த காரணத்தினால்
(2) இலங்கையிலேயே தோற்றம் பெற்ற காரணத்தினால்
(3) இலங்கையில் எல்லா இடங்களிலும் பெருமளவில் காணக்கூடியதாக இருக்கின்ற காரணத்தினால்

[பக். 8 ஐப் பார்க்க

55. நீல நிறமான மைத்துளிகள் சில சேர்க்கப்பட்ட நீர், கண்ணாடிக் குவளை ஒன்றின் அரைவாசிக்கு நிரப்பப்பட்டுள்ளது. அதற்குள் பனிக்கட்டிகள் சிலவற்றை இடும்போது
   (1) கண்ணாடிக் குவளையைச் சுற்றியுள்ள வளியில் உள்ள நீராவி குளிர்வடைந்து கண்ணாடிக் குவளையின் வெளிப்புறத்தில் நீர்த்துளிகளாகப் படியும்.
   (2) பனிக்கட்டித் துண்டுகள் அனைத்தும் நீரில் மூழ்கி கண்ணாடிக் குவளையின் அடியில் படிந்து படிப்படியாக உருகும்.
   (3) நீலநிற நீர்த் துளிகள் கண்ணாடிக் குவளையின் வெளிப்புறத்திற்கு வந்து குவளையின் வெளிப்புறத்தில் படியும்.

56. உணவு தயாரிக்கும்போது உணவின் போசணைத் தன்மைக்குத் தீங்கு ஏற்படுத்தும் சந்தர்ப்பம்
   (1) காய்கறிகளைச் சமைக்கும்போது போதுமான அளவுக்கு மாத்திரம் அவித்துக் கொள்ளுதல்
   (2) சில காய்கறிகளைப் பச்சையாகச் சலாது ஆகத் தயாரித்தல்
   (3) கீரை வகைகளை மெல்லியதாக நறுக்கிய பின்னர் நன்றாகக் கழுவுதல்

57.




மேலே தரப்பட்டுள்ள ஒழுங்கமைப்பைப் பயன்படுத்திச் செய்யும் பரிசோதனையிலிருந்து எதிர்பார்க்கப்படுவது
   (1) சூரிய ஒளியின் காரணமாக நீராவியாகும் நீரின் அளவைக் காணுதல்
   (2) சூரிய ஒளியின் வெப்பத்தை ஓரிடத்தில் பெற்றுக்கொள்ளுதல்
   (3) சூரிய ஒளியில் பல்வேறு நிறங்கள் உள்ளதா எனப் பார்த்தல்

58. திசை காட்டும் கருவி எப்போதும் காட்டுகின்ற திசைகள் எவை?
   (1) கிழக்கு - மேற்கு   (2) வடக்கு - தெற்கு   (3) வடமேற்கு - தென்கிழக்கு

59. நீண்ட நாக்கைப் பயன்படுத்தி இரையைப் பிடித்துக் கொள்ளும் பிராணி
   (1) பல்லி   (2) ஆமை   (3) நத்தை

60. "கூண்டில் வளர்க்கப்படும் ஒரு பறவை பற்றிய எனது எண்ணங்கள்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ..............................................................................................................................................

..............................................................................................................................................

2. ..............................................................................................................................................

..............................................................................................................................................

3. ..............................................................................................................................................

..............................................................................................................................................

සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න













**පොත් 20කට වඩා මිලදී ගැනීමකදී, 20%ක විශේෂ මිල අඩු කිරීමක්**

**පොත් 50කට වඩා මිලදී ගැනීමකදී, 25%ක විශේෂ මිල අඩු කිරීමක්**

**0777812087/0756999990**

ප්‍රාථමික ගුරුවරුන් සඳහා අවශ්‍ය ඡේද පොත්, දැලිස, විභව්‍යතා, ශිෂ්‍යත්ව කට්ටල, විශේෂ වට්ටම් සමග

මිලදී ගත හැක













**පොත් 20කට වඩා මිලදී ගැනීමකදී, 20%ක විශේෂ මිල අඩු කිරීමක්**

**පොත් 50කට වඩා මිලදී ගැනීමකදී, 25%ක විශේෂ මිල අඩු කිරීමක්**

# 0777812087/0756999990

ප්‍රාථමික ගුරුවරුන් සඳහා අවශ්‍ය ඡේද පොත්, දැලිස, විභව්‍යතා, ශිෂ්‍යත්ව කට්ටල, විශේෂ වට්ටම් සමග

මිලදී ගත හැක